டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.01.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 170 - Madurai | Online Edition

# கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் மீன் உற்பத்தி 106% அதிகரித்துள்ளது

புது தில்லி, ஜன.12

இந்திய பொருளாதாரத்தில் மீன்வளத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. 3 கோடி மக்களின் வாழ்வாதாரமாக விளங்கி வரும் இத்துறை வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது. உலகின் மொத்த மீன் உற்பத்தியில் 8 சதவீதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் உலகின் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தியாளராக இந்தியா திகழ்ந்து வருகிறது.

மீன் உற்பத்தியையும் மீன் வளர்ப்புத் தொழிலையும் மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2015ஆம் ஆண்டு முதல் 38,572 கோடி ரூபாய் அளவிற்கு இத்துறையில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2014-15 ஆம் ஆண்டு முதல் இத்துறையின் மேம்பாட்டிற்கு 32,723 கோடி ரூபாய் அளவிற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, நீலப்புரட்சி, மீன்வளக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம், பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டம், பிரதமரின் மீன்வளம் மற்றும் மீன் விவசாயிகள் நல கூட்டுறவுத் திட்டம் ஆகியவற்றையும் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. 2018-19 ஆம் நிதியாண்டில் விவசாயிகள் கடன் அட்டை (KCC) வசதி மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் இந்த அட்டை வைத்துள்ள 4.49 லட்சம் மீனவர்கள் மற்றும் மீன் விவசாயி களுக்கு 3569 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அரசின் இத்தகைய சீரிய நடவடிக்கைகளின் பலனாக 2013-14 ஆம் நிதியாண்டில் 95.79 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி 2024-25 ஆம் நிதியாண்டில் 106 சதவீதம் அதிகரித்து 197.75 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

# தொடர் மழையால் செழித்து வளர்ந்த மஞ்சள் செடிகள் பொங்கல் பண்டிகை அறுவடைக்காக மகிழ்ச்சியுடன் காத்திருந்த விவசாயிகள்

கிருஷ்ணகிரி, ஜன.12

தைத்திருநாளை வரவேற்கும் விதமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மஞ்சள் அமோக விளைச்சல் கண்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.



தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையில், மஞ்சள் குலைகளுக்கு பிரதான இடமுண்டு, மங்கலத்தின் சின்னமாக மஞ்சள் பார்க்கப்படுகிறது.

தைத் திருநாளை கணக்கிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காவேரிப்பட்டினம் சுற்று வட்டார பகுதி பையூர், ஜெகதாப், சப்பாணிப்பட்டி, நரிமேடு, வேலம்பட்டி, மலையான்டள்ளி, போச்சம் பள்ளி, அகரம், மத்தூர், பாளேத் தோட்டம், புளியாண்டப்பட்டி, கொடமாண்டப்பட்டி, வலசகவுண்டனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டுள்ளனர். கடந்த ஆடி மாதமே மஞ்சள் கிழங்கை விவசாயிகள் நடவு செய்தனர்.

தற்போது தொடர் மழை பெய்ததால், அவை செழித்து வளர்ந்துள்ளது.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில் பொங்கல் பண்டிகைக் காக ஆண்டுதோறும் மஞ்சள் சாகுபடி செய்து வருகிறோம். கடந்த ஆடி மாதம், நாமக்கல் பகுதிகளில் இருந்து விதை மஞ்சள் வாங்கி வந்து பாத்திக்கட்டி தகுந்த இடைவெளி விட்டு விதைத்தோம். ஒரு ஏக்கர் நிலத்தில் 30 ஆயிரம் மஞ்சள் செடிகள் பயிரிடலாம். கடந்த மாதம் நல்ல மழை பெய்தது. தொடர் மழையால், தற்போது மஞ்சள் செடிகள் செழித்து வளர்ந்துள்ளதால், இந்தாண்டு மஞ்சள் விளைச்சல் அதிகரிக்கக்கூடும் என மகிழ்ச்சி தெரிவித்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மைக்ரோ கிரீன்ஸ் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கப் பயிற்சி

பெரம்பலூர், ஜன.12

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், நாட்டார்மங்கலம் கிராமத்தில் விவசாயிகளுக்கு மைக்ரோ கிரீன்ஸ் (Microgreens) வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி நடைபெற்றது.



இப்பயிற்சி, கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி மாணவி-யர்களால் நடத்தப்பட்டது. கல்லூரியின் மாணவியர்களான அ.அபிதாரணி, ரா.அபிநயா, வீ.அன்னலட்சுமி, தோ.அந்தோனியம்மாள், ம.பாமா, ரா.தீபிகா, மு.தேவிகா மற்றும் சே.திவ்யதர்ஷினி ஆகியோர் விவசாயிகளுக்கு மைக்ரோ கிரீன்ஸ் வளர்ப்பு குறித்து செய்முறை விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கொத்தமல்லி, முளைக்கீரை, முள்ளங்கி, வெந்தயம், ப்ரோக்கோலி போன்ற மைக்ரோ கிரீன்ஸ் பயிர்களை குறைந்த இடம், குறைந்த நீர் மற்றும் குறைந்த முதலீட்டில் வளர்ப்பது குறித்து விளக்கப்பட்டது.

மைக்ரோ கிரீன்ஸ் என்பது விதை முளைத்த 7 முதல் 14 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படும் இளம் தளிர்கள் என்றும், இவை அதிகமான வைட்டமின்கள் மற்றும் தாதுச்சத்துகளை கொண்டுள்ளன என்றும் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் மைக்ரோ கிரீன்ஸ் வளர்ப்பு முறைகள் குறித்து தெளிவாக அறிந்து பயனடைந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை பற்றிய விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.12

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அந்தநல்லூர் பகுதியில் நடைபெற்ற விவசாயிகள் சந்திப்பில் சமயபுரத்தில் அமைந்துள்ள தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தின் வேளாண்மை இறுதி ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண்மை பணி அனுபவம் (RAWE) சார்ந்த பயிற்சி மேற்கொண்டனர். இந்த பயிற்சியில் மாணவர்கள் விவசாயிகளை நேரடியாக சந்தித்து மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை மற்றும் அதனுடைய பயன்களை விளக்கம் அளித்தனர்.

# பொங்கல் பண்டிகை முன்னிட்டு ஆடுகள் வரத்து அதிகரிப்பு

கிருஷ்ணகிரி, ஜன.12

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளூர் ஆடுகள் வளர்ப்பு குறைந்துள்ளதால், தேவையை பூர்த்தி செய்ய வெளி மாநிலங்களிலிருந்து ஆடுகள் கொண்டு வரப்படு கின்றன. மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட வட மற்றும் மேற்கு மாநிலங்களில் இருந்து லாரிகள் மூலம் ஆடுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு கொண்டு வரப்பட்டு, இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகின்றன.

பண்டிகை காலங்களில் இறைச்சி பயன்பாடு அதிகரிப்பதால், சந்தைகளில் ஆடுகளின் தேவை உயர்ந்துள்ளது. இதனால் வெளி மாநில ஆடுகளின் வரத்து அதிகரித்து, மாவட்டத்தின் முக்கிய வார சந்தைகள் மற்றும் இறைச்சி கடைகளில் விற்பனை சூடுபிடித்து உள்ளது. அதே நேரத்தில் போக்குவரத்து செலவு மற்றும் இடைத் தரகர் செலவுகள் காரணமாக ஆடுகளின் விலை உயர்வடைந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

காவேரிப்பட்டினம் திம்மாபுரம் அருகே லாரிகளில் கொண்டு வரப்பட்ட ஆடுகளை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள இறைச்சி கடைக்காரர்கள் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள் இங்கு வந்து மொத்தமாக வாங்கி செல்கின்றனர். பொதுமக்கள் பண்டிகை தேவைக்காக அதிகளவில் இறைச்சி வாங்கி வருவதால், சந்தைகள் பரபரப்புடன் காணப்படுகின்றன.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# மண் வளத்தை அறியும் முறையைப் பற்றி அறிந்த வேளாண் மாணவிகள்



விருதுநகர், ஜன.12

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி தலைமையில் விவசாய கலந்தாய்வு கூட்டம் சொக்க நாதபுரத்தில் நடைபெற்றது. கிள்ளிகுளம் வ.உ.சி. வேளாண்மை கல்லூரி 4ம் ஆண்டு மாணவிகளும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் மாணவிகள் உழவன் செயலியைப் பற்றி விவரித் தனர். அதில் உள்ள மானியத் திட்டங்கள், உரங்கள் இருப்பு நிலை, விதை இருப்பு நிலை, சந்தை விலை நிலவரம், இயற்கை விவசாய விளைபொருட்கள் பற்றிக் கூறினார். விவசாயிகளின் மண் வளத்தை அறியும் முறையைப் பற்றி கூறினார்கள். அதன்பின் மண் அறிவியலாளர் மண்ணின் அமில நிலை, உப்புத்தன்மை மற்றும் கரிமக் கார்பன் அளவின் விளக்கங்களைத் தெரிவித்தனர்.

# வாழைப்பழ அறுவடைக்கு பிந்தைய நோய்கள் குறித்த கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, ஜன.12

திருச்சி மாவட்டம், லால்குடி அருகே கொத்த மங்கலம் கிராமத்தில், தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக்கழகம் சமயபுரம், வேளாண் இறுதி ஆண்டு மாணவிகள் ஊரக வேளாண் பயிற்சி அனுபவத்தில் தாங்கள் பயின்று வந்ததை விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர். வாழைப்பழ அறுவடைக்கு பிந்தை ய நோய்கள் என்ற தலைப்பினை பற்றி விவரித்து கூறினர்.

**வாழையில் வரும் நோய்கள் :** ஆந்த்ராக்னோஸ், கிரௌன் ராட் போன்ற பிந்தைய நோய்களைப் படத்துடன் எடுத்துரைத்தனர். வாழை ஆந்த்ராக்னோஸ் நோயில் பழத்தில் தோலில் பழுப்பு நிறப் புள்ளிகளாகத் தோன்றும், பின்னர் கருப்பு நிறமாக மாறி அழுகலை ஏற்படுத்துகிறது என்பதையும் மற்றும் நோய் வராமல் தடுப்பதற்காக, கார்பென்டாசிம் 1 கிராம் / லிட்டர் அல்லது தையோபெனேட் மெத்தில் 1 கிராம் / லிட்டர் தெளிக்க வேண்டும் என்பதை கூறினர். அதே போன்று, கிரௌன் ராட் நோயில் பழக் குலையின் காம்புப் பகுதியில் ஏற்படும் அழுகல் என்பதையும் மற்றும் நோய் வராமல் தடுப்ப தற்காக, அறுவடையில் காயம் ஏற்படமால் கவனம், கார்பென்டாசிம் 0.1% தெளிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

VASANTHAM Agri Tech

# வசந்தம் அக்ரிடெக்

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு,
சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை விழிப்புணர்வு




பெரம்பலூர், ஜன.12

பெரம்பலூர் மாவட்டம், மலையாளப்பட்டியில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதலில் இருந்து தென்னையைக் காக்கும் வழிமுறைகள் குறித்து திருச்சி மகளிர் தோட்டக் கலைக் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதனை மலையாலப்பட்டியில் உள்ள விவசாயி சந்துரு என்பவரின் தோட்டத்தில் ஊரக தோட்டக்கலை பணி அனுபவ திட்டத்தின் கீழ் நான்காம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய மாணவிகள் ஆர்யா பிஜு, கௌரி.செ, ஜெசிகா, ஜிவா.சொ, கீர்த்தனா.ச, மோனிக்கா.து, மோத்திகா.ரா, யாழினி.செ ஆகியோர் தென்னையைப் பாதிக்கும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் வளர் சூழல், வாழ்க்கை பருவம், தாக்குதல் அறிகுறிகள் மற்றும் ஒருங்கிணைந்த நிர்வாக முறைகளைப் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தனர்.

**ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் :** 2.5 லிட்டர் மைதாவிற்கு 7 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து கஞ்சியாக மாற்றி (குளிர்வித்த பின்) 500 மிலி வேப்ப எண்ணை மற்றும் காதி சோப் கரைசல் 200 மிலி இவற்றை தண்ணீருடன் கலந்து 200 லிட்டராக மாற்றி தென்னை மரங்களுக்கு தெளிக்கவும் (இந்த அளவு 12 மரங்களுக்கு தெளிக்க முடியும்). இதனை பற்றி தெளிவான விளக்கத்தை விவசாயிகளுக்கு தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அறிவியல் முறையில் நெல்லி நடவு செய்த வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, ஜன.12

மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி வட்டாரத்திற்கு உட்பட்ட நல்லமரம் கிராமத்தில், கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய நான்காம் ஆண்டு மாணவிகள், விவசாயி கண்ணன் என்பவரது 10 ஏக்கர் நிலத்தில் 100 ஒட்டு நெல்லி மரக்கன்றுகளை நட்டு சாதனை படைத்துள்ளனர்.

கரிசல் மண் நிறைந்த இப்பகுதியில், மாணவிகள் அறிவியல் ரீதியிலான நடவு முறைகளைக் கையாண்டனர். முதலில் ஆகர் (புற்ஆளஷெ) இயந்திரம் கொண்டு 15 அடிக்கு 15 அடி என்ற இடைவெளியில் குழிகள் தோண்டப்பட்டன. பின்னர், ஒவ்வொரு குழியிலும் மண் இடப்பட்டு, அதனுடன் இயற்கை உரமான ஆட்டு எரு சேர்க்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மீண்டும் ஒரு அடுக்கு மண் இடப்பட்டு குழி நிரப்பப்பட்டது.

நிலத்தைச் சமப்படுத்திய பிறகு, ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த சொட்டுநீர்ப் பாசனக் குழாய்களின் செயல்பாட்டை மாணவிகள் உறுதி செய்தனர். இறுதியாக, 100 ஒட்டு நெல்லி கன்றுகள் நடப்பட்டு, முறையாக மண் அணைக்கப்பட்டது.

விவசாயி கண்ணன், தமிழக அரசின் ‘கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்’ கீழ் பயனடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் கீழ், குறைந்தது 10 ஏக்கர் நிலமும் நல்ல நீர் ஆதாரமும் கொண்ட ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட விவசாயிகள் இணைந்து ஒரு சங்கமாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு பதிவு செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு தரிசு நில சீரமைப்பு, மண் பரிசோதனை, ஆழ்துளைக் கிணறு அமைத்தல், பகுதிக்கு ஏற்ற பயிர் பரிந்துரைகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் போன்ற பல்வேறு சலுகைகள் கிடைக்கின்றன. வேளாண் படிப்பின் ஒரு அங்கமாக, நேரடியாகக் களத்தில் இறங்கி விவசாயிகளுடன் இணைந்து பணியாற்றியது தங்களுக்குப் பெரும் அனுபவத்தைத் தந்ததாக மாணவிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# சிக்கரி சாகுபடியில் கூடுதலான வருமானம்!

நம்மில் பலருக்கும் காலை எழுந்தவுடன் ஒரு கையில் காபி (BED COFFEE) மறு கையில் அன்றைய செய்தித்தாள் (NEWS PAPER) இல்லை என்றால் அந்த நாளில் வேலையை தொடங் காது. அந்தளவுக்கு தனி ரசிகர் கூட்டமே இருக்கிறது காபி குடிக்க. அந்த காபிக்கும் சிக்கரிக்கும் என்ன சம்மந்தம் என்பதை பார்ப்போம்.






**சிக்கரி (CHICORY) :** காபியில் முழுக்க முழுக்க காபித்தூள் மட்டுமே கலந்திருக்கும் என நினைச்சுட்டு இருக்கோம். ஆனால் காபியில் 30% மேல் சிக்கரித்தூள் கலக்கப்படுகிறது. அதுவும் ஒரு சில காபித்தூளில் 50% வரை கூட கலக்கப்படுகிறது (BLEND). சிக்கரி தூளில் ஒரு வித கசப்பு தன்மை இருக்கிறது. காபியின் அடர்த்தியை கூட்டுவதற்கும் காஃபின் (COFFENINE) அளவு குறை வதற்கும் பயன் படுத்தப்படுகிறது. 1840யில் நடந்த அமெரிக்கா உள்நாட்டு போர் காலத்தில் காபித்தூள் கிடைக்காத, தட்டுப்பாடு நிலவிய போது சிக்கரி தூளை காபிக்கு மாற்றாக பயன்படுத்திய தாக தகவல் உள்ளது. அப்போ திருந்தே காபித்தூளில் சிக்கரி கலக்கும் பழக்கம் உருவானதாக சொல்லப்படுகிறது. சிக்கரி கலக்காத இன்ஸ்டன்ட் காபியை காணவே முடியாது.

**சிக்கரி சாகுபடி :** இது ஒரு வகையான தாவரம் தான், பார்ப்பதற்கு முள்ளங்கி போன்றே காணப்படும். சிக்கரி என்பது வேர் அல்லது கிழங்கு ஆகும். அதை துண்டுகளாக வெட்டி, காயவைத்து வறுத்து (ROASTED ROOTS) அரைத்து பொடி தயாரிக்கப்படுகிறது. இது பிரான்ஸ் நாட்டிலே களைச்செடியாக நாடு முழுவதும் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இதற்கான தேவைக்காக தற்போது தனிபயிராக சாகுபடி செய்யப்படுகிறது. எக்கருக்கு ஒரு கிலோ விதை போதுமானதாகும். செப்-அக்டோபர் மாதங்களில் சாகுபடி காலமாகும். இது 4-5 மாதங்களில் அறுவடைக்கு வந்து விடும்.

**மகசூல் :** எக்கருக்கு 2000-2200 கிலோ வரை உலர்ந்த கிழங்கு கிடைக்கும். இதனுடைய தரத்தை பொருத்து ஒரு கிலோ 50 முதல் 75 வரை விற்பனை செய்யலாம். தாராளமாக ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டலாம்.

**இந்தியாவில் எந்த எந்த பகுதியில் சாகுபடி செய்யப்படுகிறது?**

இந்தியாவில் குஜராத், கேரளா, மகாராஷ்டிரா போன்ற பகுதியில் சிக்கரி சாகுபடி செய்யப்படுகிறது.

**தமிழகத்தில் எங்கு பயிரிடப்படுகிறது?**

நீலகிரி, கோவை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் சிக்கரி பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

**என்ன சூடா காபி குடிக்க கிளம்பியாச்சா??**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில்

## மண் வள ஆய்வுகளுக்கான விண்வெளி தொழில்நுட்பம் : NISAR & TRISHNA செயற்கைக்கோள் தரவுகள்

கோயம்புத்தூர், ஜன.12

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மண் வள ஆய்வுகளில், விண்வெளி தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்து விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், மண் வளஆய்வுகளுக்கான விண்வெளி தொழில்நுட்பம் : NISAR & TRISHNA செயற்கைக் கோள் தரவுகள் என்ற தலைப்பில் அறக்கட்டளை சொற்பொழிவானது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் கீழ் உள்ள மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை மற்றும் முதன்மையர், முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலகத்துடன் இணைந்து 09.01.26 அன்று நடத்தப்பட்டது.




மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை தலைவர் மற்றும் பேராசிரியரான முனைவர் து.செல்வி, நிகழ்விற்கு வரவேற்புரை நிகழ்த்தி, அறக்கட்டளை சொற்பொழிவின் தொடக்க உரையை வழங்கினார். தொடக்க விழா உரையில், முதன்மையர் (முதுகலை அறிவியல்) முனைவர் சி.பாபு, மண் வளம் தொடர்பான பல்துறை ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.


தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

அதனைத் தொடர்ந்து இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநர் முனைவர் ப.பாலசுப்ரமணியம், சொற்பொழிவாளரான முனைவர் டி.கௌரி சங்கர், அறிமுகப்படுத்தினார். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ), விண்வெளித் துறை, இந்திய அரசின் சர்வதேச மற்றும் முகமை ஒத்துழைப்பு அலுவலகத்தின் இயக்குநரான இவர், இஸ்ரோவின் சர்வதேச ஒத்துழைப்பை ஒருங்கிணைப்பதில் ஆற்றிய பாராட்டத்தக்க பங்களிப்புகள் குறித்து விளக்கினார்.


இதில் இருதரப்பு மற்றும் பலதரப்பு ஈடுபாடுகளை வழிநடத்துதல், விண்வெளி ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் மற்றும் கூட்டுறவுகளுக்கு வசதி செய்தல், இஸ்ரோவின் உலகளாவிய திட்டங்களை விரிவுபடுத்துதல் ஆகியவை அடங்கும். இவர் இஸ்ரோ/விண்வெளித் துறையின் முக்கியக் குழுக்களில் உறுப்பினராக இருந்து, இந்தியாவின் தேசிய விண்வெளி கொள்கையின் அம்சங்களை வரைவதில் பங்களித்துள்ளார். மேலும், இவருக்கு 2018-ஆம் ஆண்டிற்கான இஸ்ரோ விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) சர்வதேச மற்றும் முகமை ஒத்துழைப்பு அலுவலகத்தின் இயக்குநர், முனைவர் டி.கௌரிசங்கர், தனது உரையில் மண் பண்புகளை வகைப்படுத்துவதற்கு, செயற்கைக்கோள் தொலை உணர்வுத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மண் அமைப்பு, ஈரப்பதம், கரிம கார்பன் உள்ளடக்கம், உவர்தன்மை மற்றும் மண் சீரழிவு ஆகியவற்றை மதிப்பிடுவதில் மல்டிஸ்பெக்ட்ரல், ஹைப்பர் ஸ்பெக்ட்ரல், ரேடார் மற்றும் வெப்ப உணர்விகள் போன்ற பல்வேறு செயற்கைக்கோள் உணரிகளின் பயன்பாடுகளைப் பற்றி அவர் விளக்கினார். இஸ்ரோவின் இரண்டு முக்கிய சர்வதேச கூட்டுத் திட்டங்களான NISAR மற்றும் TRISHNA பற்றிய விவரங்களையும், மண் பண்புகளை ஆய்வு செய்வதில் அவற்றின் பயன்பாடுகளையும் அவர் விவரித்தார்.

மண் ஆய்வுகளுக்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மற்ற செயற்கைக்கோள்கள் பற்றிய விவரங்களையும் அவர் வழங்கினார். மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் பேராசிரியர் மற்றும் முதுகலை ஒருங்கிணைப்பாளர் முனைவர் கே சத்யபாமா நன்றியுரை வழங்கினார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# எந்த மாதத்தில் என்னென்ன பயிர் செய்யலாம்?



விவசாயத்தைப் பொருத்தவரை பட்டம் என்பது காலநிலை சார்ந்ததாகும். அதனால் குறிப்பிட்ட பட்டத்துக்கு ஏற்றவாறு பயிர் செய்வது மிகவும் முக்கியம். ஆடிப்பட்டத்தில் தானியப் பயிர்கள் அனைத்தும் சாகுபடி செய்வார்கள் மற்றும் காய்கறிப் பயிர்களிலும் பெரும்பாலானவற்றை சாகுபடி செய்வார்கள். தொடர்ந்து ஒரே பயிரை சாகுபடி செய்யாமல், மாற்றுப் பயிர்களை விளைவிக்கும் போது, முந்தைய பயிரின் கழிவுகள் மாற்றுப் பயிர்களுக்கு எருவாகப் பயன்படுவதோடு முந்தைய பயிரில் தங்கி வாழ்ந்த நோய்க் கிருமிகள் அதிகம் புதுப்பயிரைத் தாக்குவது இல்லை.

காய்கறிகள் மனிதர்களுக்கு சரிவிகித உணவு அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவை சுறுசுறுப்பான வாழ்க்கைக்கு உதவும் உயிர் சத்துக்கள், தாது உப்புக்கள், நார் சத்துக்களை வழங்கு வதுடன் சக்திக்கு தேவைப்படும் மாவுச் சத்துக்களையும் அதிகமான அளவில் வழங்குகிறது. எனவே மாத வாரியான உள்நாடு மற்றும் வெளிநாடு சந்தைத் தேவையினை கருத்தில் கொண்டும், அதிக லாபம் பெறும் நோக்கத்தில் மாதாந்திர காய்கறிகளின் விலை விவரத்தினை அறிந்தும் பயிரிட வேண்டும்.

**ஜனவரி : (மார்கழி, தை)**

கத்தரி, மிளகாய், பாகற்காய், தக்காளி, பூசணி, சுரைக்காய், முள்ளங்கி, கீரைகள், வெங்காயம், அவரை, கொத்தவரை, கரும்பு.

**பிப்ரவரி : (தை, மாசி)**

கத்தரி, தக்காளி, மிளகாய், பாகற்காய், வெண்டை, சுரைக்காய், கொத்தவரை, பீர்க்கங்காய், கீரைகள், கோவைக்காய், அவரை, சூரியகாந்தி, உளுந்து, கம்பு, நாட்டுச்சோளம், பருத்தி, கத்தரி.

**மார்ச் : (மாசி, பங்குனி)**

வெண்டை, பாகற்காய், தக்காளி, கோவை, கொத்தவரை, பீர்க்கங் காய், சூரியகாந்தி, உளுந்து, கம்பு, நாட்டுச்சோளம், பருத்தி, கத்தரி.

**ஏப்ரல் : (பங்குனி, சித்திரை)**

செடி முருங்கை, கொத்தவரை, வெண்டை, பீர்க்கங்காய், புடலை, பாகற்காய், அவரை, எள், கம்பு, நாட்டுச்சோளம்.

**மே : (சித்திரை,வைகாசி)**
செடி முருங்கை, கத்தரி, தக்காளி, கொத்தவரை, வெங்காயம், அவரை, எள், நாட்டுச்சோளம்

**ஜூன் : (வைகாசி, ஆனி)**
கத்தரி, தக்காளி, கோவை, பூசணி, கீரைகள், வெண்டை, கொத்தவரை, தென்னை

**ஜூலை : (ஆனி, ஆடி)**
மிளகாய், பாகற்காய், சுரைக்காய், பூசணி, பீர்க்கங்காய், புடலை, முள்ளங்கி, வெண்டை, கொத்தவரை, தக்காளி, எள், சூரியகாந்தி, உளுந்து, தென்னை, தட்டப்பயறு, துவரை, மொச்சை, பாசிப்பயறு

**ஆகஸ்ட் : (ஆடி, ஆவணி)**
முள்ளங்கி, பீர்க்கங்காய், பாகற்காய், மிளகாய், வெண்டை, சுரைக்காய், அவரை, மிளகாய், பாசிப்பயறு, துவரை, மொச்சை.

**செப்டம்பர் : (ஆவணி, புரட்டாசி)**
செடி முருங்கை, கத்தரி, முள்ளங்கி, கீரைகள், பீர்க்கங்காய், பூசணி, புடலை, அவரை, மிளகாய், நெல், பருத்தி

**அக்டோபர் : (புரட்டாசி, ஐப்பசி)**
செடி முருங்கை, கத்தரி, முள்ளங்கி, வெங்காயம், கொத்தவரை, சுண்டல், நெல், பருத்தி

**நவம்பர் : (ஐப்பசி, கார்த்திகை)**
செடி முருங்கை, கத்தரி, தக்காளி, முள்ளங்கி, பூசணி, மிளகாய், கொத்தவரை, சூரியகாந்தி, சுண்டல், நாட்டுச்சோளம், தென்னை, நெல், கரும்பு, வாழை, மரவள்ளி.

**டிசம்பர் : (கார்த்திகை, மார்கழி)**
கத்தரி, சுரைக்காய், தக்காளி, பூசணி, முள்ளங்கி, சுண்டல், நெல், நாட்டுச்சோளம், தென்னை, வாழை, மரவள்ளி, ஆகிய காய்கறி களை பயிரிடலாம்.

விவசாயிகள் எந்த வகையான பயிர் சாகுபடி செய்வதாக இருப் பினும், விதைப்பரிசோதனை செய்து விதைப்பது உயர் விளைச் சலுக்கு வழிவகுக்கும். எனவே, விவசாயிகள் தாங்கள் பயிரிடு வதற்கு முன்னர், தங்களிடமுள்ள விதை மாதிரிகளை மதுரை நாகமலை புதுக்கோட்டையில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைப்பரிசோதனை கட்டணமாக ரூ.80/- மட்டும் செலுத்தி விதை பகுப்பாய்வு முடிவுகளை அறிந்து கொண்டு பயிர் செய்து பலன் பெறுமாறு மதுரை விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பெரி.இராம லெட்சுமி மற்றும் சி.கமலாராணி தெரிவித்துள்ளனர்.

# உளுந்து பயிரில் அதிக மகசூல் பெற விதை தரம் அறிந்து விதைப்பு செய்ய வேண்டும்

புதுக்கோட்டை, ஜன.12

புதுக்கோட்டை மாவட்டத்தில் உளுந்து விதைப்பட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்குப் பின் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த விதை அளவு, சீரான மற்றும் வேகமான முளைப்புத்திறன், சீரான பயிர் எண்ணிக்கை, ஒருமித்த பூக்கும் தன்மை, சீரான முதிர்ச்சிப் பருவம், குறை வான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் 15 முதல் 20 சதவிகிதம் வரைஅதிக விளைச்சல் ஆகிய நன்மையைப் பெறலாம்.

இதற்கு விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே வாங்கி பயன்படுத்த வேண்டும். சான்று பெற்ற விதைகள் அனைத்தும் விதைச்சான்று அலுவலர்களால் வயல் ஆய்வில் வயல் தரம் உறுதி செய்யப்பட்டு பின்னர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைபரிசோதனை செய்து முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரகக் கலவன் பிற பயிர் விதைகள் அனுமதிக்கப்பட்ட அளவு கொண்டுள்ளதா? என்பதை உறுதி செய்த பின்னர் விநியோகிக்கப்படுவதால் சான்று பெற்ற விதை களைப் பயன்படுத்தி தேவையான பயிர் எண்ணிக்கையினை பராமரிக்கலாம்.

விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள உளுந்து விதைகளை விதைக்கும் சூழ்நிலையில் விதைக்க உள்ள விதையில் முளைப்புத்திறன் குறைந்தபட்சம் 75 விழுக்காடு புறத்தூய்மை 98 விழுக்காடு அதிகபட்ச ஈரப்பதம் 9 விழுக்காடுக்குள் உள்ளதா? என்பதை அறிந்து விதைப்பு செய்தால் உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற வாயப்புள்ளது. எனவே விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள உளுந்து விதைகளின் முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் ஈரப்பதம் அறிய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் 622 002, என்ற முகவரியில் செயல் பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் 100 கிராம் விதையினை துணிப்பையில் இட்டு மேலும் ஈரப்பதம் அறிய

தனியே 100 கிராம் அளவு விதைகளை காற்று புகாத பாலிதீன் பைகளில் இட்டு பயிர் இரகம் தேவையான ஆய்வு விபரங்களை குறிப்பிட்டு மாதிரிகளைக் கொடுத்து, மாதிரிக்கு ரூ.80/- மட்டும் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம்.

பரிசோதனை முடிவுகளை உங்கள் இருப்பிட முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் என புதுக்கோட்டை விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.



# அதிக மகசூல் பெற தரமான விதைகளை தேர்ந்தெடுப்பீர்!

விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை, தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்றளிப்புத் துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதைப் பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன், பிறரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முளைப்புத்திறன் பரிசோதனையில் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதை மாதிரிக்கும் இயல்பான நாற்றுகள், இயல்பற்றவை கடின விதைகள் மற்றும் உயிரற்ற விதைகள் போன்றவை கண்டறியப்பட்டு முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்படுகிறது.

முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும். வலுவற்ற நாற்றுகள் அல்லது வலுவற்ற பயிர்களை கண்டறிந்து தரமான விதையினை உறுதி செய்து இடுபொருள் செலவினை குறைத்து அதிக மகசூல் பெற விதை பரிசோதனை அவசியமாகும். வலுவற்ற நாற்றுகள் மீண்டும் வளருமா? மற்ற நல்ல நாற்றுக்களை போன்ற பலன் தருமா? என்ற ஐயம் அனைவரிடமும் உள்ளது. ஆனால் இந்த வலுவற்ற நாற்றுகள் இயல்பான நாற்றுகளைப் போல வளர்ந்து பயன் தரமுடியாது. ஏனெனில் இயல்பான வளர்ச்சியை தரக்கூடிய முக்கிய பாகங்களான வேர்,தண்டு அல்லது வளர்நுனி இவற்றில் ஏதேனும் ஒன்றில் பழுது, குறைபாடு, முழு வளர்ச்சியின்மை : வேர், தண்டு மற்றும் வளர்ச்சிக்கான முக்கியமான சில பகுதிகள் இல்லாமல் போவதன் காரணமாக நாற்றுகளின் வளர்ச்சி தடைபடுகிறது.

விதையுறைகள் பழுது, நாற்றுகளின் மேல் பகுதி அல்லது நாற்று முழுவதிலும் உள்ள குழிகள், பிளவுகள், வெடிப்புகள், பூச்சி தாக்கு தலுக்குள்ளாவதால் ஏற்படும் காயங்கள், வித்திலைகள் மற்றும் நுனிமொட்டு பாதிப்படைதல், நாற்றுகளின் முக்கிய பாகங் களான வேர், தண்டு, நுனிமொட்டு ஆகியவை வலுவற்றும், சரியான நீள் விகிதத்தில் இல்லாமல் இருத்தல், வேர் நன்றாக வளர்ந்து தண்டுப்பகுதி வளர்ச்சி குறைந்தும் காணப்படுதல், முதல் நிலை அல்லது இரண்டாம் நிலை வேர் வளர்ச்சி குறைந்து காணப்படுதல்

போன்றவை வலுவற்ற நாற்றுகள் என அழைக்கப்படுகிறது. வலுவற்ற நாற்றுகள் உருவாக சில காரணங்கள் உள்ளன. முதிர்ச்சியற்ற விதைகளை விதைப்புக்கு பயன்படுத்துதல்

முறையாக விதைகளை சேமித்து பயன்படுத்தாமை, விதையினை சேமிக்கும் போது அல்லது பயன்படுத்தும் போதோ முக்கிய பாகங்களான விதையின் கரு உணவு முதலியன பாதிக்கப்படு வதாலும், விதையானது பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு ஆளாவதாலும், இயந்திரங்களை பயன்படுத்தி விதைகளை அறுவடை செய்தல், தூற்றுதல், தூய்மைப் படுத்துதல், விதைகளை ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு கொண்டு செல்லும் போது வெப்பநிலை அதிகரிப்பதாலும், பூச்சி நோய் தாக்கத்திற்கு உள்ளாகும் விதைகளை பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கொண்டு அழிக்கும் போதும் இதுபோன்று விதைகள் பாதிப்படைந்து வலுவற்ற நாற்றுக்களை உருவாக்குகிறது.

எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் பெற்று லாபம் பெறவும் விதை இடுபொருள் செலவினைக் குறைக்கவும், தங்களிடம் உள்ள விதைகளை கரூர் காந்திகிராமம், திண்ணப்பா நகர் முதல் குறுக்குத் தெருவில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- மட்டும் பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி, பரிசோதனை செய்து வலுவான மற்றும் வலுவற்ற விதைகள், உயிரற்ற விதைகள் எவ்வளவு உள்ளது எனஅறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கும் பட்சத்தில் உரிய முறையில் சேதமில்லாமல் அறுவடை செய்து,விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்கு தலுக்கு உள்ளாகாமல் சேமிக்குமாறு கரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் க.ரமேஷ்குமார் கேட்டுக்கொள்கிறார்.



# மண் மாதிரி சேகரித்தல் செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

நாகப்பட்டினம், ஜன.12

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு இளநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணவிகள் ஆனந்தி, கீர்த்திகா, மோனிகா, பிரியதர்ஷினி, சுப லட்சுமி, சுவாதி மற்றும் தமிழ் கலைச்செல்வி ஆகியோர் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில் இரண்டு மாத கால களப்பயிற்சியை ஈடுபட்டுள்ளனர். இதன் ஒரு பகுதியாக மண் மாதிரி எடுக்கும் செயல்முறை விளக்கத்தை விவசாயி ஜோதிகுமார், தென்னந்தோப்பில் விவசாயிகளின் முன்னிலையில் செய்து காட்டினர். இதன் மூலம் மண்ணின் ஊட்டச்சத்து அளவு, பி ஹெச் மதிப்பு, உப்பு அளவு, நீர் மேலாண்மை, கரிம கார்பன் போன்றவற்றை அறிய இச்செய் முறை உதவுகிறது.

நிலத்தில் அங்கங்கே வி வடிவ குழிதோண்டி, மேலடுக்கு மண்ணை நீக்கிவிட்டு சுமார் 1 அங்குல கனமுள்ள மண்ணை பல இடங்களிலிருந்து சேகரித்து, அவற்றை ஒன்றாக கலந்து, சுத்தமான பைகளில் இட்டு மண் பரிசோதனைக்கு அனுப்புவதே சரியான வழிமுறை ஆகும். இறுதியில் இதன் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகளான தேவையற்ற உர பயன்பாடு குறையும், நிலத்தின் உற்பத்தி திறன் உயரும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மண் ஆரோக்கியம் மேம்படும் எனவும் விளக்கம் அளித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மைக்ரோ கிரீன்ஸ் [Micro Greens] - விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

## மைக்ரோ கிரீன்ஸ் என்றால் என்ன ?

முளைத்த 7 முதல் 14 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படும் இளம் கீரை வகைகளே மைக்ரோ கிரீன்ஸ் எனப்படுகின்றன. இவை விதை முளைத்த பின் முதல் 2-4 உண்மையான இலைகள் தோன்றும் நிலையில் அறுவடை செய்யப்படுகின்றன.

1. Sprouts (முளைகீரை) – விதை + வேர் உடன்
2. Micro Greens – தண்டு + இலை மட்டும்
3. Baby Greens – 20-30 நாட்கள்

## மைக்ரோ கிரீன்ஸ் வளர்க்க ஏற்ற விதைகள்

- முள்ளங்கி
- வெந்தயம்
- ப்ரோக்கோலி
- சீரகம்
- பட்டாணி (Pea shoots)
- கடுகு
- கொத்தமல்லி
- பாசிலி
- சூரியகாந்தி
- அமராந்தஸ் (தண்டு கீரை)

## வளர்க்க தேவையான பொருட்கள்

- பிளாஸ்டிக் தட்டு / மர தட்டு
- வெர்மி கம்போஸ்ட்
- விதைகள்
- நிழல் வலை / துணி
- தேங்காய் தூள்
- தோட்ட மண்
- தண்ணீர் ஸ்ப்ரே

## வளர்ப்பு முறை

### 1. மண் தயாரிப்பு

தேங்காய் தூள் – 50%, தோட்ட மண் – 25%, வெர்மி கம்போஸ்ட் – 25%, = நன்றாக கலக்கவும்.



### 2.விதை விதைப்பு

விதைகளை அடர்த்தியாக பரப்பவும். மண்ணில் புதைக்க தேவையில்லை. மேலே மெலிதாக மண் தூவவும்.

### 3. தண்ணீர் மேலாண்மை

ஸ்ப்ரே மூலம் தினமும் 2 முறை. அதிக நீர் தவிர்க்க வேண்டும். நீர் தேங்கக் கூடாது.

**4. ஒளி & காற்று**

முதல் 3 நாட்கள் – நிழல்
4வது நாள் முதல் – சூரிய ஒளி (மென்மையான)
நல்ல காற்றோட்டம் அவசியம்

**5.அறுவடை**

7–14 நாட்களில் கத்தரியால் அடிப்பகுதியில் வெட்டி எடுக்கவும். காலை நேரம் சிறந்தது.

**ஊட்டச்சத்து மதிப்பு**

- வைட்டமின் A, C, K
- இரும்புச்சத்து
- கால்சியம்
- ஆன்டி–ஆக்ஸிடன்ட்ஸ்

**சாதாரண கீரைகளை விட 4–40 மடங்கு சத்து அதிகம்**

**உடல்நல நன்மைகள்**

- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
- ரத்த சுத்திகரிப்பு
- செரிமானத்தை மேம்படுத்தும்
- உடல் எடை குறைப்பு
- சர்க்கரை, இதய நோய்கள் கட்டுப்பாடு

**வீட்டு தோட்டத்தில் பயன்**

- குறைந்த இடம்
- குறைந்த செலவு
- 10–15 நாட்களில் மகசூல்
- ரசாயனம் தேவையில்லை

**வணிக வாய்ப்பு**

- ஹோட்டல்
- சூப்பர் மார்க்கெட்
- ஆர்கானிக் கடைகள்
- ஆன்லைன் விற்பனை

**1 கிலோ மைக்ரோ கிரீன்ஸ் விலை ரூ.500 – 2000 வரை**

**பொதுவான தவறுகள்**

- அதிக நீர்
- நேரடி கடும் வெயில்
- விதை குறைவாக விதைப்பு
- பழைய விதைகள்

மேலும் விவரங்களுக்கு **மு.சோபிகா, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் ய.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, னி.ஆர்த்தி, உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், ச. பூர்ணிமா, உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@ gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# மண் பரிசோதனையின் பயன்களை அறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.12

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஹரிநந்தனா, பெனாசீர்.சா, ரிசா, சாருமதி, செரின் செண்பகம், சிவப்பிரியா, சினேகவள்ளி, சுகந்தி, சுஜா வர்ஷினி, சுவேதா, சுரேகா, வர்சா, வசந்த ஸ்ரீ, யாஷிகா, யோகவர்ஷினி, யுவ ஸ்ரீ.தி, யுவஸ்ரீ.ந ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் கிராமங்களில் தங்கி உழவர் பெருமக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய சாகுபடி அனுபவ முறைகள் பற்றி அறிந்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி மாவட்டம், மன்னார்புரத்தில் அமைந்துள்ள மண் பரிசோதனை நிலையத்திற்கு சென்றனர். அங்கு நாகராஜன் என்பவர் மண் மாதிரிகள் எடுத்தல், மண் பரிசோதனையின் பயன்கள், நுண்ணூட்ட ஆய்வு மாதிரிகள் எடுத்தல் மற்றும் பாசன நீர் மாதிரி எடுத்தல் ஆகியவற்றை பற்றி எடுத்துரைத்தார். மேலும் பிரச்சனைக்குரிய மண், களர் மண்ணின் தன்மையை பற்றியும் அதன் சீர்திருத்த முறைகளை பற்றியும் விளக்கினார். தமிழ் மண் வளம் என்னும் செயலி பற்றியும் கூறினார்.

# விவசாயத்தில் ட்ரோன்களின் பயன்பாடு பற்றி அறிந்து கொண்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, ஜன.12

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், சமயபுரத்தை சேர்ந்த ட்ரோன் இயக்குனர் ராகுல் டேவிட்டை சந்தித்த நாளந்தா வேளாண் கல்லூரி மாணவர்களான அ.ஆதித் கித்தேலின் பார்க்கர், ச.ஹரிஷ் குமார், ம.மது மாறன், த.மனோஜ், மு.முகமது பாசில், ம.மௌனிஷ், ப.பிரவீன் குமார், மு.ராஜகுரு ஆகியோர் விவசா யத்தில் ட்ரோன்களின் பயன்பாடு, ட்ரோன்களின் அங்கீகரிக்கப்பட்ட

பயிற்சி மையங்கள் எங்குள்ளன மற்றும் நில அளவை தயாரிக்கும் முறைகள் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களை பல வகை யான கேள்விகள் மூலம் அறிந்து கொண்டனர். மேலும், இந்த நிகழ்வானது திருச்சி மாவட்டம், எம்.ஆர்.பாளையத்தை சேர்ந்த நாளந்தா வேளாண்மை கல்லூரியின் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் நடைப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.





